கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 10.00
மலர்–07 ஜூன் –2014 இதழ்–77


## குறளமுதம்–77

வள்ளுவர் வாய்மொழிய எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

அதிகாரம்–8 அறத்துப்பால் அன்புடைமை

என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம்

எலும்பில்லாத புழுவை வெயில் காய்ந்து வருத்துவதுபோல, அன்பில்லாத உயிரை அறக்கடவுள் வருத்தும்.

### பனை தென்னை வள அபி.கூ.நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற

# முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான வேதனத்தை அதிகரிக்க கோரிக்கை!

### வடக்கு மாகாண கல்வி அமைச்சரிடம் சமாசம் சமர்ப்பிப்பு!

**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள் ஆகியவற்றினால் தமது எல்லைப் பரப்பில் நடாத்தப்பட்டு வருகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், அவர்களுக்குரிய பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்தவர்களாக இருப்பார்களேயானால் வடக்கு மாகாண சபை எதிர் காலத்தில் உரிய நிதிகள் கிடைக்கும் பட்சத்தில் அவர்களுக்கான ஊதியத்தை அதிகரித்து வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் திரு குருகுலராஜா அவர்கள் தெரிவித்தார்.**



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில் நடைபெற்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கல்வி உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலின் போது, சமாசத்தால் முன் வைக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் வேதன அதிகரிப்பு கோரிக்கை தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், எமது மூதாதையர்கள் இந்தப் பனை வளத்தின் உணவுப் பொருட்களை உண்டு வாழ்ந்ததனாலேயே நோய்களற்றவர்களாக நீண்டகாலம் வாழ்ந்தார்கள். ——(7ம் பக்கம் பார்க்க)

## காரைநகர் சங்கத்தின் களஞ்சியசாலை திறப்பு

காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் சுமார் ரூபா 23 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் தலைமைக் காரியாலயத்துக்கு அண்மையாக அமைக்கப்பட்ட களஞ்சிய சாலை இம்மாதம் 23ம் திகதி பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

சங்கத்தின் செயலாளர் திரு பரமேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

——(7ம் பக்கம் பார்க்க)——

## குளிரூட்டி கொள்வனவுக்கு ரூ. 20 ஆயிரம் நிதியுதவி

கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ. சங்கம் அதன் அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பதநீரை பதப்படுத்தி, போத்தலில் அடைத்து, குளிரூட்டி விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (7ம் பக்கம் பார்க்க)



காரைநகர் சங்க களஞ்சியசாலை திறப்புவிழா

## 92வது சர்வதேச கூட்டுறவுதின விழா போட்டிகள்; சமாசத்தால் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடத்தப்படவுள்ள 92வது சர்வதேச கூட்டுறவுதின விழா போட்டிகள் தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் சமாசத்தின் உறுப்புரிமைச் சங்கங்கள், கொத்தணிகள், சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், (2ம் பக்கம் பார்க்க)

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

### சிந்தனைத்துளி

"உரிய காலத்தில் ஆற்றப்படாத கருமம்,
பருவத்தில் நாட்டப்படாத பயிர் போன்றது"
-அறிஞர்-

## கற்பகக்கரு

# காலமாற்றமும் எமது நிறுவனங்களும்

கால மாற்றத்துக்கு ஏற்பவும் மக்களின் மன மாற்றத்துக்கு ஏற்பவும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது அனைத்து செயற்பாடுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இம்மாற்றத்தை இத்துறை சார்ந்த நிறுவனங்கள் ஏற்படுத்தாது விடின் இத்துறையோடு சம்பந்தப்பட்டவர்களோ அல்லது சம்பந்தப்படாதவர்களோ இத்துறையில் நுழைந்து சுயநலத்துடன் செயற்படும்போது காலம் காலமாக தமது வாழ்வாதாரத் தேவைகளை நிறைவுசெய்வதற்காக கடினமாக உழைத்துக்கொண்டிருக்கின்ற அங்கத்தவர்களுக்கு பாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துவிடும்.

இத்துறைசார்ந்த பொறுப்பிலுள்ளவர்கள் தமது கடமைகளை உணர்ந்து மேற்கூறப்பட்ட மாற்றங்களை, அதாவது சங்கங்களின் விற்பனை நிலையங்களை நவீன முறையில் மாற்றியமைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படல், சங்கங்களின் உற்பத்தி நிலையங்கள் தூய்மையானதாகவும் உற்பத்திப் பொருட்கள் தரமானவையாகவும் அனைவரும் விரும்பி நுகரத்தக்க வகையில் கவர்ச்சிகரமான பொதியிடல் செயற்பாடுகளிலும் கவனம் செலுத்தல், போத்தலடைப்பு தொழிற்சாலையில் உற்பத்திக் கிரயத்தினை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கான ஆலோசனைகளை இத்துறைசார்ந்தவர்களுக்கு வழங்கல் போன்றவற்றை மேற்கொள்ளல் வேண்டும்.

அத்துடன் சங்கங்களின் கிராமிய வங்கியின் செயற்பாடுகளை ஏனைய அரச, தனியார் வங்கிகளின் செயற்பாடுகளுக்கு ஒப்பானதாக முன்னேற்றுவதற்கும், இவற்றை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு புதிய கவர்ச்சிகரமான சேமிப்புத்திட்டம், பரிசில் திட்டங்களையும் ஏற்படுத்தி, கிராம மட்ட மக்களின் மத்தியில் வங்கி செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திய பெருமையை எமது கிராமிய வங்கிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் எமது சங்கங்களால் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளின் மாணவர்கள் மத்தியில் சிறுவர் சேமிப்புத் திட்டத்தினை விரிவுபடுத்தி வருடந்தோறும் மாணவர்களை அத்திட்டத்தில் இணைத்து எதிர்காலத்தில் அம் மாணவர்கள் கல்விக்கான நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான எற்பாடுகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

சங்கங்கள் மாதிரி விற்பனை நிலையங்களை உருவாக்கி அதில் தமது அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் மக்களின் நலன்கருதி பொதிசெய்யப்பட்ட தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்யக்கூடிய செயற்திட்டங்களை மேற்கொள்வதன்மூலம் எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் பன்முகப்படுத்தப்படுவதுடன் அனைவரினதும் நன்மதிப்பையும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் எற்படும்.

ஏனைய விடயங்களுக்கு நிதியினை வீண் விரயம் செய்யாது மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்கு உரிய முக்கியத்துவமளித்து செயற்படவேண்டும் என கற்பகம் இடித்துரைக்க விரும்புகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"
ஆசிரியர்

## 92வது சர்வதேச கூட்டுறவுதின்விழா ...... 1ம் பக்க தொடர்ச்சி

முன்பள்ளி சிறார்கள் ஆகியோருக்கிடையில் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான விபரங்கள் மற்றும் அதற்கான விண்ணப்பப் படிவங்கள் உரிய பனை தென்னை வள நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான விபரங்கள் வருமாறு,

அங்கத்தவர்களுக்கான பேச்சுப் போட்டியானது, "பனை தென்னை வளம் தந்த பண்பான கூட்டுறவு" எனும் தலைப்பில் 5-7 நிமிடங்களும், கவிதைப் போட்டியானது, "பயன்பெறுவோம் பனை வளத்தால்" எனும் தலைப்பில் 3-5 நிமிடங்களும், கட்டுரைப் போட்டியரனது, "கூட்டுறவு நிறுவனங்களில் நவீன தொழில்நுட்பம்" எனும் தலைப்பில் (200 சொற்களுக்கு குறையாமல்) 1 மணித்தியாலமும் நடைபெறும்.

பணியாளர்களுக்கான பேச்சுப் போட்டியானது, "உலகமயமாதலில் கூட்டுறவின் வளர்ச்சி" எனும் தலைப்பில் 5-7 நிமிடங்களும், கவிதைப் போட்டி, "அட்சய பாத்திரமே கூட்டுறவு" எனும் தலைப்பில் 3-5 நிமிடங்களும், கட்டுரைப் போட்டியானது "மாணவர் கல்வியில் கூட்டுறவின் பங்கு" எனும் தலைப்பில் (200 சொற்களுக்கு குறையாமல்) 1 மணித்தியாலமும் நடைபெறும்.

மகளிர்குழு உறுப்பினர்களுக்கான பேச்சுப் போட்டியானது "பெண்களின் வலுவை பயனுறுதி ஆக்கியதே கூட்டுறவு" எனும் தலைப்பில் 5-7 நிமிடங்களும், கவிதைப் போட்டியானது, "கற்பகதரு" எனும் தலைப்பில் 4-6 நிமிடங்களும், கட்டுரைப் போட்டியானது "சமூகமயமாதலில் கூட்டுறவின் பங்கு" எனும் தலைப்பில் (150 சொற்களுக்கு குறையாமல்) 1 மணித்தியாலமும் நடைபெறும்.

முன்பள்ளி மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டியானது, திருக்குறளின் அதிகாரம் 1இன் கடவுள் வாழ்த்தின் 1-10 வரையான குறள்கள், 4-6 நிமிடங்களும், குழுநடனப் போட்டியானது, "கூட்டுறவுப் பண்புகள், தமிழர் பண்பாடுகள், பனைவளம் சார்ந்த விடயங்களை உள்ளடக்கியதான பாடல்" கொண்டதாக 8-10 நிமிடங்களும் இடம்பெறும்.

இத்துடன் அங்கத்தவர், பணியாளர்களுக்கான கயிறிழுத்தல் போட்டி, அணிக்கு 7பேர் கொண்ட 5 பந்துப்பரிமாற்ற மென்பந்து துடுப்பாட்டப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.

## காரைநகர் பனை தென்னை வ கூ.சங்கத்தின் களஞ்சியசாலை திறப்பு விழாவின்போது...






# கூட்டுறவுப் பணியாளர் தகைமை உறுதிப்படுத்தல்

க.நா.சபாரத்தினம்
[பண்டத்தரிப்பு பல நோக்குக் கூ.சங்க முன்னாள் பொதுமுகாமையாளரும், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க ஆலோசகரும்], சுதுமலை மேற்கு.

இலங்கை கூட்டுறவு அமைப்பானது 1971ம் ஆண்டு ஆரம்ப காலப் பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்டது. இதன் காரணமாக கிராம மட்டத்தில் குறிப்பிட்ட எல்லைப் பரப்பில் இயங்கி வந்த உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என ஒன்றுபட்ட நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதன் காரணமாகவும் அப்போதிருந்த அரசியல் சூழ்நிலை காரணமாகவும் புனரமைப்பின்போதிருந்த பணியாளர்களாகிய பட்டதாரிகளும் புதிய கல்விசார் தகைமையுடையோரும் இணைந்து ஒரு பணிச்சமூகம் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி தொழில்சார் வல்லுநர்களையும் உள்வாங்கி பல தொழிற்பாடுகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தியதோடு, தகுதியான பணியாளருள்ள ஓர் அமைப்பாக வலுப்பெற்றிருந்தது. இத்துடன் ஏனைய பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் அப்போதிருந்த நிதியமைச்சர் கலாநிதி என்.எம்.பெரேரா அவர்களின் நெறிப்படுத்தலுக்கமைய புனரமைப்புச் செய்யப்பட்டு பணியாளர் தகைமைகள் ஓரளவு சிறப்பாக அமையக் கூடியதாக இருந்தது. இதன் காரணமாக கூட்டுறவு அமைப்புக்கள் ஆடை தயாரிப்பு நிலையம், ஏனைய உற்பத்தி நிறுவனங்கள் என்பவற்றை தனியாரிலும் பார்க்க திறம்பட நிர்வகித்ததுடன் பலருக்கு வேலைவாய்ப்புக்களையும் வழங்கியது. இதன்பின் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக திறந்த பொருளாதாரக் கொள்கை என அறிமுகப்படுத்தப்பட்டு உற்பத்திப் பொருட்கள் விற்பனை கூட்டுறவு நிறுவனங்கள், தனியார் வர்த்தகர் போட்டி என்பன ஏற்பட்டதால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்புக்களை இச்செயற்பாடுகள் சற்று உலுக்கின.

புனரமைப்பு ஆரம்ப நிலையில் தகுதிசார் ஊழியர் உள்வாங்கிய நிலையிலுள்ளபடியாலும் கூட்டுறவின்மேல் பணியாளர் அக்கறை, பற்றுக் காரணமாகவும் இவ் அமைப்புக்கள் தங்கள் நிலையை ஓரளவு தாக்கப்பிடித்து இணங்கி வந்தன. இவ்விடைப்பட்ட காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பலவித்மான நெருக்கடிகளை சந்திக்கவேண்டி ஏற்பட்டன. இதன் காரணமாக ஸ்திரமற்ற நிதித்தன்மை, மக்கள் வங்கியை நம்பி இயங்கவேண்டிய நிலைமை, உரிய சம்பளம் வழங்க முடியாத நிலைமை, என்பன ஏற்பட்டன. இந்நிலைமைகளுக்க சில பகுதித் தொழிற்பாடுகள் நடத்தமுடியாத நிலைமைகளும் ஒரு காரணமாகும். இதன்போது ஆடை உற்பத்தி நிலையங்கள், ஏனைய உற்பத்தி நிறுவனங்கள் மூடவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதனால் இதற்கென இணைக்கப்பட்ட தொழில்சார் வல்லுநர்கள் விலகிக்கொள்ளவேண்டிய நிலைமைகளும் உருவானது. இத்துடன் ஏனைய தகைமையுள்ள சிலரும் பிற நிறுவனங்களை நாடியும் சுயமுயற்சிகளில் ஈடுபட்டும் விலகிச் சென்றுள்ளனர். இதன்போது இத்துறையில் ஆளணியில் ஒரு தொய்வு நிலை எனக்குறிப்பிட்டாலும் பற்றுள்ள ஆரம்ப நிலைப் பணியாளர்கள் ஈடுகொடுத்து இத்துறையை வழிநடத்தி வந்துள்ளனர். இக்காலகட்டத்தில் நட்டத்தில் பல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தபடியால் பணிக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறும்போது இதற்கு முன்னிருந்த கவர்ச்சியின்மை காரணமாக தகைமையுடையோர் இப்பகுதியை நாடவில்லை. தகைமையுடையோர் நாட்டம் இல்லாவிடினும் ஒரு குறிப்பிட்ட வேலையை யாராவது ஒருவரை நியமித்து கடமைகள பூரணப்படுத்த வேண்டிய நிலைமை இருந்தது. இச்சந்தர்ப்பத்திலும் ஆரம்ப நிலைப் பணியாளர்கள் தகைமையுடையோர், பட்டதாரிகள் என்பவர்களும் பங்குகொள்ளும் காரணமாக தொடர்ந்து நிர்வகிப்பதில் தாக்கங்கள் ஏற்படவில்லை. 1971ம் ஆண்டு தொடக்கம் 1980ம் ஆண்டு காலப்பகுதி வரை கடமையில் இணைக்கப்பட்டவர்கள் தற்போதைய காலப்பகுதியில் ஓய்வுபெற்றும், ஓய்வுபெறும் நிலையிலும் (60 வயது பூர்த்தியாவதால்) இருப்பதால் பின்னடைவு ஏற்பட்ட காலத்தில் தகைமைசார் ஊழியர்கள் உள்வாங்கப்பட்டாத காரணத்தால் தற்போதைய சூழலில் நிர்வாக ஆற்றல் மிக்கவர்கள் தட்டுப்பாடான ஒரு சூழ்நிலை கூட்டுறவுத் துறைக்கு ஏற்பட்டுள்ளது. இதன் தாக்கம் பல கூட்டுறவு நிறுவனங்களில் பிரதிபலிக்கின்றன. ஒருவர் விலகினால் பொறுப்பு தகைமையுள்ளவர்கள் இல்லாதமையாகும்.

இதற்கு தற்போதுள்ள மூத்த பணியாளர்கள் முன்னுக்கு வர தங்களை தகைமைப்படுத்த தவறியமையே முக்கிய காரணமாகும். இது விடயத்தில் இரு தரப்பினரும் குற்றவாளிகள்தாம். இரு தரப்பு என்பது ஒன்று பணியாளர், இரண்டாவது பணிப்பாளர். ஒவ்வொரு பணியாளரும் தங்கள் தகைமைகளை வளர்த்துக்கொள்ள கூட்டுறவுப் பயிற்சிகளைப் பெற்று, அல்லது வெளிவாரி கல்விகளைப் பூர்த்திசெய்து தன்னார்வம் மூலம் முன்னேறியிருக்க வேண்டும். நிர்வாக சபையும் தங்கள் பணித்தொகுதியை சிறந்த பயிற்சியுடைய தகைமையுடையவர்களாக வளப்படுத்துவதில் அக்கறை கொள்ளல் வேண்டும். மாவட்ட கூட்டுறவுச் சபை காலத்துக்கு காலம் பயிற்சிகளை நடாத்த முன்வந்தாலும் பயிற்சியாளர்கள் முன்வராதபடியால் (போதுமான தொகை இல்லாதபடியால்) பயிற்சிகள் நடத்தப்படவில்லை. நிர்வாகம் பயிற்சிகளுக்கு பணியாளர்களை அனுப்புவதன்மூலம் பதில் ஏற்பாடுகள் செய்வதில் உள்ள செலவினம் என்பவற்றை கருத்திற்கொண்டு முழுமையான ஆர்வம் காட்டவில்லை. பணியாளர் தாம் பயிற்சி பெற்றால்தான் தகைமையுள்ளவர்களாக மாறி எதிர்கால முன்னேற்றத்துக்கு உதவலாம் என உணர்ந்து செயற்படாமையும் இப்பின்னடைவுக்கு காரணமாகும். எனவே பணியாளர், பணிப்பாளர் யாவரும் விசேட கவனம் எடுத்து பணியாளர் தகைமைகளை உறுதிப்படுத்த ஆவன செய்தல் வேண்டும். இதன்மூலமே ஸ்தாபனத்தின் குறிப்பிட்ட இலக்கை அடைவதோடு சிறந்த சேவையையும் ஆற்ற முடியும்.

கூட்டுறவு நிறுவனம் ஒன்றின் ஆரம்ப நிலையில் இணைந்து படிப்படியாக முன்னேற்றம் அடைந்து நிர்வகிப்பது இலகுவான முறையாகவும், தகுந்த ஆளுமைகொண்ட நிர்வாக வழிநடத்தலாக அமையும் என்பதும் கூட்டுறவு துறைசார் வல்லுநர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும்.

(5ம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகளின் நிழல்கள்

வடமாகாண கல்வி அமைச்சர் அவர்கள் பனை தென்னை வ.அ.கூ.நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரை சமாசத்தில் சந்தித்தபோது..



# 1 ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

"ஒன்று பட்டால் உண்டுவாழ்வு" இது பண்டைய காலந் தொட்டு எல்லோராலும் உச்சரிக்கப்படுகின்ற ஒரு சொல். மனித வாழ்வானது வளம் பெற வேண்டி அவர்களது வாழ்வு நிலையை உயர்த்தவும் மேன்மையுற வைக்கவும் ஏற்ற வழி முறைகளை, வழிவகைகளை ஆராய்ந்தவர்கள் முதலில் கண்டு பிடித்த அல்லது முதலில் மேற்கொள்ளவேண்டிய விடயமாகவே ஒன்றுபடல் அல்லது ஒற்றுமைப்படல் என்பதைக் கூறி, அதிலிருந்துதான் மனித வாழ்வியலுக்கான அனைத்துமே ஆரம்பமாகிறது, ஆரம்பமாக வேண்டும் என்பதைக் கண்டு கொண்டார்கள்.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடி" எனப் பெயர் பெற்ற எங்கள் தமிழ்க்குடியினர் கண்டுபிடித்துச் சொல்லிவைத்த "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற இந்தப் பழமொழி உண்மையிலேயே வெறுமனே ஒரு பழமொழியாகக் கொள்ளாமல் ஆழ இறங்கி அலசிப் பார்ப்போமாயின், இது ஓர் "தாரக மந்திரம்" எனத் துணிந்து கூறமுடியும்.

மனித இனம் தோன்றிய காலகட்டத்தில் அவனுக்கான பல நூறு தேவைப்பாடுகள் நிவர்த்தி செய்ய முடியாதனவாக இருந்ததாகவும், அவற்றினை நிவர்த்தி செய்யும் பொருட்டு மனித இனம் பலப்பல குழுக்களாக இணைந்து ஒன்றுபட்டு ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு வகையான தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் உழைத்து அல்லது செயற்பட்டு வாழ முற்பட்டனர் என்பதை பழங் கதைகள் எமக்கு கோடிட்டுக் காட்டுகின்றன. இவ்வாறாக ஒன்றுபட்டு தமக்கான வாழ்வியலை நிறுவிக் கொண்ட மனித இன வரலாறானது காலம் செல்லச் செல்ல வளர்ச்சி அடைந்து மேன்மை பெற்று ஒரு ஆரோக்கியமான முன்னேற்றப் பாதையை அடைந்தது.

இவ்வேளையில் ஒன்றுபடல் என்பதை நாம் சற்று விரிவாக ஆராய்ந்து பார்ப்போமேயானால், ஒரு இனம் ஆனாலும் சரி, ஒரு நாடு ஆயினும் சரி ஒன்றுபடல் எனும் உயரிய பண்பு இல்லாத இனமோ நாடோ உருப்பட்டதாக வரலாற்றில் எந்த இடத்திலும் பதிவாகவில்லை எனத் துணிந்து கூறமுடியும்.

இரண்டாம் உலகப் போரின் போது அணுகுண்டால் அழித்தொழிக்கப்பட்ட ஜப்பான் அதன் பின்னரான காலப்பகுதியில் ஒன்றுபட்டுக் கிளர்ந்தொழுந்து தமக்கான வாழ்வியலைத் தேடிக் கொண்டதனால் இன்று உலகிலேயே தன்னிறைவு பெற்ற முதன்மை நாடாகத் திகழ்கிறது எனில் அவர்களுடைய இந்த வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அவர்களிடையேயான ஒன்றுபடலே முதன்மைக் காரணி என்பது கண்கூடு.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என எம் முன்னோர்கள் சொல்லி வைத்த பழமொழிக்கமைய ஒன்றுபட்டால் வலிமை இல்லாதோர் வாழ்வும் வலுப்பெறும் என்பதற்கு வேறெந்த உவமான, உவமேயங்களும் தேவையில்லை என்றே கூறலாம்.

"ஊர்கூடி தேர் இழுத்தல்" என்பது ஒன்றுபட்டால் ஆகாதது எதுவுமில்லை என்பதையே சுட்டி நிற்கிறது. போட்டிகள் நிறைந்த இந்நாளில் எங்கும் எதிலும் எவற்றிலும் போட்டி, போட்டி என்ற போக்கினால் மனித வாழ்வியலும் சில வேளைகளில் ஆரோக்கியமான முன்னேற்றத்தையும் பல வேளைகளில் ஆரோக்கியமற்ற போலிப் பொலிவுகளுக்குள்ளும் வீழ்ந்து போய் விடுகின்ற இக்காலகட்டத்தில் மனித குலமானது ஒன்றுபடவேண்டிய தேவைக்குள்ளும் கடப்பாட்டுக்குள்ளும் தள்ளப்பட்டிருக்கிறது என்பதும் மறுக்கப்பட முடியாத பேருண்மை ஆகும்.

தே.தவராசா,
கோண்டாவில் ப.தெ.அ.கூ.சங்கம்

எனவே இன்றைய கால சூழ்நிலைகளை நோக்கி இவற்றினைக் கருத்திற் கொண்டு தொலைந்து போகின்ற அல்லது தொலைக்கப் பட்டுக்கொண்டிருக்கின்ற எங்களது வாழ்வியல், பண்பாட்டு விழுமியங்கள், கல்வி நிலை, பொருளாதார மேம்பாடு, அரசியல் ஸ்த்திரம் என்பவற்றை காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நிலைநிறுத்திக் கொள்ளல் வேண்டும். மனித இனம் மகத்தான இனம் என்கின்ற மாண்மியத்தைத் துளிர் பெறச் செய்யவேண்டும் எனில் எமக்கிடையே "ஒன்றுபடல்" என்பது அசுர பலத்தோடு புது உத்வேகம் கொள்ளல் வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்று ஆன்றோர் அன்று சொல்லி வைத்தது இன்று எமக்கு இமாலயத் தேவையாக இருப்பதால் நாம் எல்லாம் ஒரு இனம், ஒரு குலம் என்ற ஒற்றுமை உணர்வு கொண்டவர்களாக எம்மை நாமே உருவாக்கத் தவறுவோமேயானால் அன்று அரசியல் தலைவர் ஒருவர் கூறியது போல எங்களை ஆண்டவனாலும் காப்பாற்றமுடியாது போய்விடும்.

எனவே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற, விரும்பப் படுகின்ற ஒன்றுபட்டு உயரிய வாழ்வு ஒன்றை உண்டு பண்ணிக் கொள்வோம் ஆக.

**"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!"**

## கூட்டுறவுப்.... 3ம் பக்க தொடர்ச்சி

அதற்காக கல்விசார் தகுதியுடன் நிர்வாகப் பதவிகளில் நேரடியாக நியமனம் பெற்றுக் கடமையாற்ற முடியாது என்பது அல்ல. இது ஆரம்ப நிலையில் இருந்து வந்த நிர்வாகிகளின் வழிநடத்தலுக்கு ஒப்பானதாக அமையமாட்டாது. அனுபவ ரீதியான ஆற்றல்கள் நிர்வாக நடைமுறைக்கு பரஸ்பரம், புரிந்துணர்வு உள்ளதாக அமையும்.

எனவே இத்துறைசார் பணியாளர்கள் என அடியெடுத்து வைப்பவர்கள் தங்கள் தகைமைகளை தாமே வளர்த்து தாமும் பயன்பெறுவதோடு, ஸ்தாபனத்துக்கும் பயனளிக்கக்கூடியவர்களாக மாற வேண்டும். உயர்நிலைப் பதவி பெறும் சந்தர்ப்பம் இல்லாதவிடத்தும் தமக்களிக்கப்பட்ட கடமைகளை திறம்பட ஆற்றும் தகைமையைப் பெறுதல் வேண்டும். இந்த சுயமுயற்சி, தன்னார்வம் இல்லாவிடின் இத்துறையில் ஓர் முட்டுக்கட்டையாகவே காணப்படுவர். 3 மாதங்களில் 3 அடி நகரக்கூடியவர்களும், 3 வருடங்களில் 3 அங்குலம்தன்னும் நகர மாட்டாதவர்களும் இத்துறையில் இணைந்துள்ளனர். இதன் தாக்கங்களே ஸ்தாபனத்தின் பின்னடைவுக்குக் காரணமாகும். தகைமைநிலைக்கல்வி தொடர்பாக முன்னேற்றம் பெறமுடியாதிருப்பினும் தமக்களிக்கப்பட்ட கடமையை நூற்றுக்கு நூறு வீதம் சரியாகச் செய்யக்கூடிய ஆற்றலையும் வலுவையும் (7ம் பக்கம் பார்க்க)

# என்னவளே!



பா.பொன்னொளி,
அல்வாய்.

கண்களின் இடுக்கில்
கவி புனைய
காற்றை மந்திரித்துக்
கற்றுக்கொடுத்தவளே!

தெருக்களில் தொடுவாரற்றுக்கிடந்த
என்னை மெல்ல எடுத்து
நம்பிக்கை அன்பை ஊட்டி
இனிய சுதி கூட்டியவளே!

காதல் என்ற வார்த்தைக்கு
கருத்துக் கொடுத்து
மறுப்புத் தெரிவிக்கவிடாது
காதலிக்கச் செய்தவளே!

மேனியெங்கும் உன் நினைவுகளோடு
அவள் மனப் பூங்காவும்
பூங்காவனமாய் வகை வகையாய்
பூத்துக் குலுங்கச் செய்தவளே!

இளந்தென்றல் மிதந்துவர
இதமான காற்று பறந்துவர
கூசியது உள்ளம்
குளிர்ந்தது உடல்

உன் நட்பும்
தொட்டுவிட்டுச் செல்ல
அவள் மனமும்
பருவத்தே மாறுகின்றது

கண்சிமிட்டும் உன் அழகு
எண்ணத்தைக் கிளறிவிட
உன் நினைவோ மின்னலாய்
மின்னி மறைகிறது

# கொள்ளி இட்டாள்



T.கமல், காரைநகர்

கண் ஜாடையினால்
கண்ணீரால் நிறைந்திருந்த
என் கண்களை
குளிரச் செய்தவள்

இதழோரப் புன்னகையால்
காய்ந்திருந்த என் உதட்டையும்
சிரிக்க வைத்தவள்
வலிகளால் நிறைந்திருந்த
என் நினைவுப் பெட்டகத்தை
தன் நினைவுகளால்
இனிமை ஆக்கியவள்

மௌனங்களால் மகிழ்வு தந்தவள்
பண்புகள் பார்த்து நானும்
உண்மை காதல் கொண்டேன்
ஆனால் அவளோ இன்று
முள்ளாய் குத்திவிட்டாள்
பண்பில்லாதவன் என்று
நாவினால் சுட்டுவிட்டாள்
ஆறடி உடம்பு இன்று
அவள் இட்ட கொள்ளியினால்
சத்தமின்றி அடங்கிப் போனது
மயிர் நீங்கின் உயிர்வாழாக்
கவரிமான் போல....!

# திருமணம்

அ.சீதாராம்,
பருத்தித்துறை.



சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணம்
சொந்தமில்லா இருவரை இணைத்திடும் பந்தம்
தங்கத்தில் செய்யப்படும் தாலியே சாட்சியாக
தம்பதியர் மனங்களில் பொங்கிடும் அன்பு வெள்ளம்

இளஞ்சோடிகள் இருவரின் இல்லறம் தொடர்ந்திட
இவர்களின் அன்புச் சின்னம் நான் என
இளநகை காட்டி ஜெனனிக்கும் மகவு—இங்கு
இரு கரம் ஏந்தி மகிழ்வர் இவர்களும்

காலங்கள் கடுகதி வேகத்தில் உருண்டிட
கனவுகள் இவர்கள் மனங்களில் தொலைந்திட
நிஜங்கள் இங்கு விஸ்வரூபம் காட்டிட
நினைப்பதெல்லாம் நடந்திடுமோ இவ்வுலகில்

இல்லற சுமைகள் இருவரையும் அழுத்தும்
இருவர் மனங்களும் பேதங்கள் காட்டும்
சொல்லடி பொல்லடி எனப்பல நிகழும்
சொர்க்கம் இங்கே நரகத்தில் முடியும்

இல்லறம் கண்டவன் இனி மணம் வேண்டான்
இல்லறம் காண்பவன் இது சுகம் என்பான்
சூடு கண்ட பூனையது அடுப்பங்கரையை நாடாது
சூழ்கவி என்பதே கல்யாணம் என்பதை உணர்வோம்

# சுமை

பா.மதனபாரதி

இது சமுதாயத்தைப் பார்க்க
உதவும் ஜன்னலல்ல
என் உறவுச் சாக்கடையில்
நாற்றமடிக்கும் வற்றல் நீர்
அடுத்தவர் சுமையை அகற்றும்
இன்பத்தின் ஊற்றுமல்ல-இது
சங்கடத்தையும் சோகத்தையும்
அழைத்துவரும் சாரல்!

எண்ணங்களின் ஊற்றில்
எழுந்த தாஜ்மஹாலை
எழுத்துலகுக்கு இழுத்துவரும்
வலையுமல்ல - இது
என் வாழ்வின் சுமைகளை
எடுத்தியம்பும் எழுதாமறை!

பேனாத் தூண்டிலில்
அகப்படும் மின்னலல்ல - என் கவி
பேனாவின் மை
கத்திக்குமுறியமும்
சமுதாயத்தின்
ஆயுதமுமல்ல-இது
சுமையை இறக்கி
வைக்க-நான்
சொந்தமாக்கிய
அட்சய பாத்திரம்!

இது வெளிச்சத்தில் பறக்கும்
விட்டில் பூச்சியல்ல
இருட்டில் தடுமாறித்
தவழும் குழந்தை
இது ஆனந்தத்தின்
ஆர்ப்பரிப்புமல்ல
சோகத்தின் சுமை...!

## முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான ..... 1ம் பக்க தொடர்ச்சி

ஆனால் இன்று நாம் அவற்றை தவிர்த்துக்கொண்டமையால் சிறு வயது முதலே பல நோய்கள் எம்மை பற்றிக்கொள்கின்றன.

இந்தப் பனை வளத்தை நம்பி வாழுகின்ற இம்மக்களின் பொருளாதார வளம் பெருகவேண்டும். அதற்கு இவ்வளத்தை மூலாதாரமாகக் கொண்டு இயங்கும் அமைப்புக்கள் உபஉணவு உற்பத்தியில் கூடுதலான அக்கறை செலுத்த வேண்டும். இவ்வளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு எமது வடக்கு மாகாண சபை இவ்வளம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை சமர்ப்பித்தபோதும் எமக்கு சரியான வகையில் நிதி கிடைக்காமையினால் அதனை செயற்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் எம்மை சந்திக்கின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் இவ் வளம் சார்ந்த விபரங்களை நாம் தொடர்ச்சியாக தெரிவித்தே வருகின்றோம். எமது மாகாண சபை சீராக செயற்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும் பட்சத்தில் இவ்வளம் சார்ந்த செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினரும் வடக்கு மாகாண கூட்டுறத்துறைக்கு பொறுப்பான திரு கே.சயந்தன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது,

1992ம் ஆண்டு தொடக்கம் இச்சங்கங்கள் தமது அங்கத்தவர்களது பிள்ளைகளின் பாலர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருவதை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம். மேலும் இச்செயற்பாட்டின்மூலம் சுமார் 150 முன்பள்ளிகள் நடத்தப்பட்டுவருவதுடன், அதன்மூலம் 200 ஆசிரியர்களும் 3ஆயிரத்து 500ற்கு மேற்பட்ட முன்பள்ளி மாணவர்களும் பயன்பெற்று வருகின்றமை. ஒரு பெரும் சாதனையாகும்.

குறைந்த வேதனத்துடன் நிறைவான பணியாற்றுகின்ற இம் முன்பள்ளி ஆசிரியர்களின் பணி போற்றுதற்குரியது. இவ் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தமது சேவைக்கால கல்விப் பயிற்சிகளைப் பெற்று தகைமை பெற்ற ஆசிரியர்களாக தம்மை தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும். அவ்வாறு தயார்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு கூடுதலான ஊதியம் வழங்குவதற்கான திட்டங்களை வடமாகாண சபை பரிசீலித்து வருகின்றது. இதற்குரிய நிதி கிடைக்கும் பட்சத்தில் நாம் அதனைச் செயற்படுத்துவோம் எனத் தெரிவித்தார்.

சமாசத்தின் ஆரம்பகாலச் செயலாளரும் பனை அபிவிருத்திச் சபையின் முதலாவது தலைவருமான கற்பகக் காவலர் திரு க.நடராசா ஆசிரியர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது,

1972ம் ஆண்டு மிகவும் பின் தள்ளப்பட்டிருந்த எமது சமூகத்தை ஒரு கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டு வந்து இன்று 42 ஆண்டுகளைக் கடந்த நிலையில், அன்று எனது மனதில் என்ன சிந்தனை தோன்றியதோ அச்சிந்தனைகள் அனைத்தையும் நிறைவேற்றி ஒரு சிறப்பான பொருளாதார வளம் பெற்ற கூட்டுறவு அமைப்பாக இப்பனை தென்னை வளச் சங்கங்கள் திகழ்வதை நேரடியாகவே கண்டு பூரிப்படைகின்றேன்.

அச்சிந்தனை என்னவென்னில், எம்மால் இச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலரின் முன் அட்டைப் படமானது, சீவல்த் தொழிலாளி ஒருவரின் பிள்ளைகள் உயர்கல்வி கற்று முன்னேறவேண்டும் என்ற கருத்தை தாங்கியதாக வடிவமைத்திருந்தோம். அச்சிந்தனை இன்று நிதர்சனமாக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரியதாகும். தொடர்ந்தும் இச்சங்கங்கள் கல்வி மேம்பாட்டுக்காக பெருந்தொகையான நிதியினை செலவு செய்து வருவதையிட்டு எனது பாராட்டுக்களைகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் திரு பரஞ்சோதி அவர்கள் உட்பட மேலும் பலர் தமது கருத்துக்களை தெரிவித்தனர். இதில் கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தமது கோரிக்கைகளை கல்வி அமைச்சரிடம் முன்வைத்தபோது, அவர் அவற்றை கவனமாகக் கேட்டதுடன் தம்மால் இயன்றளவு நிவர்த்தி செய்வதாகவும் கூறினார்.

இக்கலந்துரையாடல் நிகழ்வில் சமாசப் பதில் பொதுமுகாமையாளரால் "பனை தென்னை வள நிறுவனங்களின் ஆரம்பகால நிலையும் தற்போதைய வளர்ச்சி நிலையும்" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கை பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டது.

## காரைநகர்.... 1ம் பக்க தொடர்ச்சி

சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேசசெயலர் திருமதி ரி.பாபு, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன், சித்தங்கேணி மதுவரிப் பொறுப்பதிகாரி திரு நா.கிருபாகரன், சமாசத் தலைவர் திரு நா.கணேசன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கூ.அ.அலுவலர் திரு சு.அகிலன், வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு செ.செல்வராசா, காரைநகர் கிராமசேவகர் (J/48) திரு சி.சுமந்திரன், ஈ.பி.டி.பி.யின் காரைநகர் அமைப்பாளர் திரு இ.கண்ணன், வலிகாமம் கொத்தணி பொதுமுகாமையாள்ர் திரு க.சுதாகரன், சமாசப் பொதுமுகாமையாளர் திரு வ.சிவகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## குளிரூட்டி..... 1ம் பக்க தொடர்ச்சி

இச்செயற்பாட்டை மேற்கொள்வதற்கான குளிரூட்டி ஒன்றை கொள்வனவு செய்வதற்காக ஏற்படும் செலவில் ஒரு பகுதி நிதியாக 20 ஆயிரம் ரூபாவை அவுஸ்ரேலியாவிலிருந்து வருகைதந்துள்ள கற்பகக் காவலர் திரு க.நடராசா அவர்கள் அன்பளிப்பாக வழங்கி உதவியுள்ளார்.

இதற்காக கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் தமது நன்றியினை அவருக்கு தெரிவித்துள்ளனர்.

## கூட்டுறவுப்.... 5ம் பக்க தொடர்ச்சி

பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். ஒருவரது கடமையில் மற்றவர் பிழை பிடிக்குமளவுக்கு அல்லாது தகைமை உள்ளவர்களாக இருந்தாலே போதுமானது. இதுவே தகைமை உறுதிப்படுத்தலாகும்.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மாவட்டக் கூட்டுறவுச் சபை வழங்கும் கனிஷ்ட பிரிவு, சாதாரண பிரிவு, உயர் பிரிவு என மூன்று வகைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகளாக இருந்தாலும் சரி, ஏனைய வெளிவாரிப் பயிற்சிகளாக இருந்தாலும் சரி இத்துறையில் ஈடுபடுபவர்கள் இத்துறை தொடர்பான கொள்கைகள், இது தொடர்பான செயற்பாடுகள், இதன் எஜமான்களாகிய மக்கள் பெறவேண்டிய பயன்கள் என்பன தெளிவாக அறியப்பட்டு அவர்கள் பயன்பெற கடமையாற்றுதல் வேண்டும்.

இதனைப் பற்றிச் சிந்திக்காது இருப்பார்களேயானால் இவ்வமைப்பு ஏன் இயங்குகின்றது என்ற நிலைமை தெரியாமலேயே பணியாளர் கடமைகள் தொடர்வதோடு, ஸ்தாபனத்தின் குறிக்கோளையும் அடைய முடியாது.

## விபத்து மரண நிதியை சங்கங்கள் வழங்கலாம்!

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம், சித்த வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய நிறுவனங்களின் பணியாளர்கள் பணியின்போது தலைமை அலுவலகத்திலோ, கிளை நிலையத்திலோ மரணம் சம்பவித்தாலும் அதேபோல அங்கத்தவர்கள் தொழிலின்போது மரத்திலிருந்து தவறி வீழ்ந்து மரணமடைந்தாலோ குறித்த சங்கம் சம்பவம் நடந்து 24 மணி நேரத்துக்குள் சமாசத்துக்கு அறிவிக்க வேண்டும் என மாதாந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிகழ்ந்தால் சமாசம் ஏனைய அங்கத்துவ சங்கங்களுடன் தொடர்பு கொண்டு மரண நிதியை திரட்டி ஒரு மாத காலத்தினுள் குறித்த சங்கத்தின் ஊடாக சம்பந்தப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமெனவும், அடுத்துவரும் மாதாந்த மாநாட்டில் பங்களிப்பு நிதி வழங்கிய, வழங்காத சங்கங்களின் விபரங்களை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி சங்க உறுப்பினர் பொ.சுபாஸ்கரன் மரத்திலிருந்து வீழ்ந்து இறந்தமையால் சங்கங்கள் அவரின் குடும்பத்தினருக்கு உதவிக் கொடுப்பனவு வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச காணியை பெறுவதற்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், கோண்டாவில், அரியாலை ப.தெ.வ.சங்கங்கள் தமது கிளை நிலையங்களை அமைப்பதற்காக அரச காணிகளை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை கூ.அ.உதவி ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளன. இவ்விண்ணப்பங்கள் உதவி ஆணையாளரின் சிபார்சுடன் அவ்வப் பகுதி பிரதேச செயலரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக உதவி ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில் சித்தி; நிதி வழங்க ஏற்பாடு!

யாழ். மாவட்ட பணியாளர் நலநோன்புக் கூட்டுறவுச் சங்கம் 2013ம் ஆண்டு தொடக்கம் தமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற பிள்ளைகளுக்கு நிதியுதவி வழங்கி கௌரவிக்கவுள்ளதாகவும் உறுப்பினர்கள் இவ்விபரங்களை நலநோன்புச் சங்கத்துக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுக் கொடியை பறக்கவிட சமாசத் தலைவர் வேண்டுகோள்

92வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஜூலை 5ம் திகதி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் காரியாலயங்களில் கூட்டுறவுக் கொடியினைப் பறக்கவிடுமாறு சமாசத் தலைவரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## நெறியாளர்குழு உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட நெறியாளர் குழு உறுப்பினர்கள் தமது பதவிகளை உறுதிசெய்யும் வகையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ளல்வேண்டும்.

இச்சத்தியப் பிரமாணம் மேற்கொள்ளும் படிவத்தினை சமாசத்தின் அச்சகப் பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும். எனவே விரைவாக படிவங்களை பெற்று சத்தியப்பிரமாணத்தை மேற்கொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கோரப்பட்டுள்ளது.

## பொதுக்கூட்டங்களை நடாத்துவதற்கு ஏற்பாடு

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றின் வருடாந்தப் பொதுக் கூட்டங்களை பின்வரும் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சங்கானை சங்கம், இம்மாதம் 28ம் திகதியும், யாழ். மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நி.பணியாளர் நலன்புரிக் கூட். சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் ஜூலை 8ம் திகதியும், வடமராட்சி கிழக்கு சங்கத்தின் பொதுக்கூட்டம் ஜூலை 15ம் திகதியும் நடைபெறவுள்ளன.


சுத்தமான பனை வெல்லம் உற்பத்தி



சுவையான பதநீர் உற்பத்தி



கிராமிய வங்கிச் சேவை



அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கல்.

மகளிர் குழு உறுப்பினர்களுக்கு சுயதொழில் பயிற்சி

கல்விச்சேவை
- முன்பள்ளிகளை நிர்வகித்தல்
- அங்கத்தவர், பணியாளர் மற்றும் மகளிர்குழு உறுப்பினர்களுக்கான கல்விப் பயிற்சி

வாடகை வாகன சேவை (லொறி)



சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

மின்சார நிலைய வீதி, சுன்னாகம்

021 224 0022


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2014ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்டது.